முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்**

## AA1 பரீட்சை – 2017 யூலை

# (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

(Economics for Business and Accounting)

2017–07–22
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
*எழுதுதல் - 03 மணித்தியாலம்*

பக்கங்கள் : 06
வினாக்கள் : 06

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

(3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட விடைப் புத்தகத்தில் பரீட்சைக்கு விண்ணப்பித்த* ***ஒரே மொழியில்*** *மட்டும் எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். ஏதாவது எடுகோள்கள் மேற்கொள்ளப் பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை மாத்திரம் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு வினைச் சொல் உள்ளடங்கியிருக்கிறது. (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *முதல்* ***1.10*** *வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. நீங்கள் தெரிவு செய்த விடையின் இலக்கத்தை வினா இலக்கத்துடன் உங்களது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வரும் கூற்றுக்களில் "நுண்பாகப் பொருளியலின் (Micro-economics)" நோக்கெல்லையைச் மிகச் சிறப்பாக விளக்கும் கூற்றும் எது?

(1) இது பொருளாதாரத்தை மொத்தமாகக் கையாள்கிறது.

(2) இது தனிநபர் தீர்மானமெடுத்தல் அலகுகளின் பொருளாதார நடத்தையைப் பற்றிய கற்கை ஆகும்.

(3) இது நுகர்வோரின் தீர்மானங்களை மாத்திரம் கையாள்கிறது.

(4) இது சந்தைப் பொருளாதாரம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை மாத்திரம் கையாள்கிறது.

**1.2** பின்வருவனவற்றில் உற்பத்திச் சாத்திய வளையியிற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு எடுகோளாக **அமையாதது** எது?


(1) வளங்களின் நிறை தொழில் காணப்படுகிறது.

(2) இரண்டு வகையான பொருட்கள் மாத்திரம் உற்பத்தி செய்யப்படுகின்றன.

(3) வளங்கள் வரையறையற்றவை.

(4) இது தரப்பட்ட காலப்பகுதி ஒன்றிற்காகத் தயாரிக்கப்படுகிறது.

**1.3** பின்வரும் வரைபடம் பண்டமொன்றின் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது:




உற்பத்தியாளர் மிகை (Producers' surplus) :

(1) ரூ. 800/- (2) ரூ. 1,200/- (3) ரூ. 1,600/- (4) ரூ. 400/-

**1.4** பொருள் ஒன்றின் நுகர்விலிருந்தான நபர் ஒருவரின் திருப்தி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) எல்லைப் பயன் (Marginal utility) (2) பயன் (Utility)

(3) சந்தர்ப்பச் செலவு (Opportunity cost) (4) மொத்தப் பயன் (Total utility)

**1.5** சராசரி மொத்தக் கிரய (ATC) வளையியின் இழிவுப் புள்ளியில், எல்லைக் கிரயமானது (MC) :

(1) சராசரி மாறும் கிரயத்திற்குச் சமனாகும். (2) சராசரி மொத்தக் கிரயத்திற்குச் சமனாகும்.

(3) சராசரி நிலையான கிரயத்திற்குச் சமனாகும். (4) சராசரி மொத்தக் கிரயத்தைவிட அதிகமாகும்.

**1.6** பின்வருவனவற்றுள் கட்டற்ற சந்தை முறைமையில் (free market system) அரசாங்கத்தால் விதிக்கப்படும் கீழ் எல்லை விலையுடன் (குறைந்தபட்ட விலையுடன்) தொடர்புடைய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) இது நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக அரசாங்கத்தால் பயன்படுத்தப்படுகிறது.

(2) இது உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கத்தால் பயன்படுத்தப்படுகிறது.

(3) இது கேள்விக் கணியத்தின் அதிகரிப்புக்கும் நிரம்பல் கணியத்தின் குறைப்புக்கும் வழிவகுக்கிறது.

(4) மேலுள்ள எல்லாம்.

**1.7** 2015 ஆம் ஆண்டிற்கான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 132 ஆகவும் 2016 ஆம் ஆண்டிற்கான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 142 ஆகவும் இருந்திருப்பின், இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் மேலோங்கியிருந்த பணவீக்க வீதம் யாதாக இருந்திருக்கும்?

(1) 9.57 % (2) 10.12 % (3) 5.67 % (4) 7.57 %

**1.8** 2016 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கைக்கிணங்க, 2016 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் :

(1) 4.4 % (2) 6.0 % (3) 4.8 % (4) 3.9 %

**1.9** பின்வருவனவற்றுள் சென்மதி நிலுவையினது (Balance of payment) நடைமுறைக் கணக்கின் ஒரு உப கணக்காக **அமையாதது** எது?

(1) வியாபாரக் கணக்கு (2) வருமானக் கணக்கு
(3) சேவைக் கணக்கு (4) வெளிநாட்டு முதலீட்டுக் கணக்கு

**1.10** கட்டற்ற சந்தைப் பொருளாதாரத்தில் (free market economy) அரசாங்கம் தலையீடு செய்வதற்கான ஒரு பிரதான காரணம்:

(1) அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு
(2) வெளிநாட்டு நாணயமாற்று வருவாய்களை அதிகரிப்பதற்கு
(3) நாட்டின் பண நிரம்பலை அதிகரிப்பதற்கு
(4) வருமானம் மற்றும் செல்வத்தின் நியாயமான பங்கீட்டை நிறைவேற்றுவதற்கு

இல. **1.11** தொடக்கம் **1.15** வரையிலான பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **"சரியானதா"** அல்லது **"தவறானதா"** என்பதைக் குறிப்பிடுக. உமது விடையினை (சரியானது / தவறானது) வினாவுக்குரிய இலக்கத்துடன் உமக்குத் தரப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுதுக.

**1.11** பொருள் **A** இன் விலை குறைவடையும்போது பொருள் **B** இற்கான கேள்வி அதிகரிக்குமாயின் பொருட்கள் **A** உம் **B** உம் பிரதியீட்டுப் பொருட்கள் (substitute goods) எனப்படும்.

**1.12** குறுங்கால ஓட்டத்தில் (short run) சகல உற்பத்திக் காரணிகளும் மாறக்கூடியவைகளாக இருக்கின்றன.

**1.13** கேள்வியானது ஒப்பீட்டளவில் நெகிழ்ச்சியற்றதாக இருக்கும்போது, வரிச் சுமையின் பெரியளவு விகிதம் நுகர்வோரால் சுமக்கப்படுகிறது.

**1.14** மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஐக் கணிப்பிடும்போது கறுப்புச் சந்தை நடவடிக்கைகளும் பாதாள உலக நடவடிக்கைகளும் உள்ளடக்கப்படுகின்றன.

**1.15** பணத்தின் உள்ளக உண்மைப் பெறுமதி (internal real value of money) என்பது பண அலகு ஒன்றினால் உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளின் கணியம் (quantity) ஆகும்.

இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவுசெய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தக்கததில் எழுதுக.

**1.16** மொத்தப் பயன் உச்சமாக இருக்கும்போது, எல்லைப் பயன் ………… *(மறைப்பெறுமதியாக / பூச்சியமாக)* இருக்கும்.

**1.17** பணத்தின் கேள்விக்கான (demanding money) முன்னெச்சரிக்கை (பாதுகாப்பு) நோக்கமானது மெய் வருமானம் மற்றும் பணவீக்கம் தொடர்பில் ………… (எதிர்க்கணியமாக / நேர்க்கணியமாக) இருக்கிறது.

**1.18** கடன்களாக அல்லது மேலதிகப்பற்றுக்களாக பொதுமக்களுக்குப் பணம் வழங்குவது ………… *(மத்திய வங்கியின் / வர்த்தக வங்கியின்)* ஒரு தொழிற்பாடாகும்.

**1.19** எதிர்காலச் சந்ததியினர் தங்களுடைய சொந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான திறமையை விட்டுக்கொடுக்காமல் தற்போதைய தேவைகளைப் பூர்த்திசெய்கின்ற அபிவிருத்தி ………… *(பொருளாதார அபிவிருத்தி / நிலைபேறான அபிவிருத்தி)* எனப்படும்.

**1.20** வேலையற்றோர் வீதம் என்பது தொழிற் படையிலுள்ளவர்களின் எண்ணிக்கையில் ………… *(வேலை செய்கின்ற / வேலையற்ற)* நபர்களது *எண்ணிக்கையின் விகிதம் ஆகும்.*

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

# பகுதி B

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 02

(a) "பொருளாதாரமற்ற வளங்கள் (Non-Economic Resources)" என்னும் பதத்தை உதாரணம் ஒன்றுடன் **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) பண்டம் ஒன்றிற்கான பின்வரும் கேள்வி அட்டவணை உமக்குத் தரப்பட்டுள்ளது:

| அலகு ஒன்றின் விலை (ரூ.) | கணியம் (அலகுகள்) |
|---|---|
| 10 | 20 |
| 9 | 25 |
| 8 | 30 |
| 7 | 35 |

பண்டத்தின் விலை ரூ. 10/- இலிருந்து ரூ. 9/- இற்குக் குறைவடையும்போது பண்டத்தினது கேள்வியின் விலை நெகிழ்ச்சியைக் (Price Elasticity of Demand) **கணிக்குக.** (03 புள்ளிகள்)

**(c)** நிறை போட்டி (Perfect competition) மற்றும் தனியுரிமை (Monopoly) என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் நான்கைக் (04) **குறிப்பிடுக**. (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

(a) "உற்பத்திக் காரணிகளுக்கான கேள்வி என்பது ஒரு வருவித்த கேள்வி (derived demand) ஆகும்."

(i) மேற்படி கூற்றுடன் நீங்கள் இணங்குகிறீர்களா, இல்லையா என்பதைக் **கூறுக.** (01 புள்ளி)

(ii) உங்களது விடைக்கான காரணங்களை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) அளவுத்திட்ட விளைவுகளின் (returns to scale) வகைகள் மூன்றை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

(a) (i) நல்ல பணத்தின் (Good Money) பண்பியல்புகள் (Characteristics) நான்கைக் (04) **கூறுக**.

(04 புள்ளிகள்)

(ii) "பணத்திற்கான கேள்வி (Demand for Money)" என்பதன் கருத்தை **விபரிக்குக**. (03 புள்ளிகள்)

(b) இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் (functions) மூன்றைக் (03) **கூறுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) அரசாங்கமானது சமநிலை விலையை விடக் குறைவான ஒரு விலையை, பண்டமொன்றிற்கான உயர்ந்தபட்ச விலையாக விதிப்பதனால் ஏற்படுகின்ற விளைவுகளை **விபரிக்குக**. (06 புள்ளிகள்)

(b) சர்வதேச வர்த்தகப் பாதுகாப்புவாதத்தின் (Protectionism) அனுகூலங்கள் நான்கைக் (04) **கூறுக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

## பகுதி C

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

பொருளாதார முறைமை என்பது அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஒரு சமூகத்திலுள்ள செயற்பாட்டு முறைமை ஒன்றாகும். ஒவ்வொரு முறைமையிலுமுள்ள சிறப்பம்சங்களின் பரிமாணங்களில் காணப்படும் பரந்துபட்ட வேறுபாடுகளுடன், நடைமுறையில் பல்வேறு பொருளாதார முறைமைகள் காணப்படுகின்றன.

**(A)** (a) பொருளாதார முறைமைகளின் பிரதான வகைகள் மூன்றைப் (03) **பட்டியலிடுக.** (03 புள்ளிகள்)

(b) மேலே **(a)** இல் பட்டியலிடப்பட்ட பொருளாதார முறைமைகளில் ஏதாவது ஒன்றினால், அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

**(B)** கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் 2016 ஆம் ஆண்டிற்கான பொருளாதாரம் ஒன்றின் தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய அனுமானத் தரவுகள் காரணிக் கிரய விலைகளில் காட்டப்பட்டுள்ளன:

| | **ரூ. மில்லியன்** |
|---|---|
| விவசாயம், கால்நடை, காடு வளர்ப்பு | 250 |
| மீன்பிடி | 120 |
| சுரங்கத்தொழில் மற்றும் கல் உடைத்தல் | 75 |
| உற்பத்தி | 100 |
| மின்சாரம், எரிவாயு, நீர் | 200 |
| நிர்மாணம் | 80 |
| மொத்த மற்றும் சில்லறை விற்பனைகள் | 150 |
| ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் | 100 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் | 160 |
| வங்கியியல், காப்புறுதி, வீடு மனை வாங்கி விற்றல் | 135 |
| வசிப்பிட உரிமை (Ownership of Dwellings) | 200 |
| அரசாங்க சேவைகள் | 160 |
| தனியார் சேவைகள் | 250 |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்படுகின்றன :

(1) 2016 ஆம் ஆண்டிற்கான நேரில் வரிகள் மற்றும் கொடைகள் (Indirect taxes and subsidies) என்பன முறையே 150 மில்லியன் ரூபா மற்றும் 100 மில்லியன் ரூபா ஆகும்.

(2) 2010 ஆம் ஆண்டு அடிப்படை ஆண்டாக இருப்பதுடன் 2016 ஆம் ஆண்டிற்கான விலைச் சுட்டெண் 125 ஆகவும் இருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

2016 ஆம் ஆண்டிற்காகப் பின்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – காரணிக் கிரய விலையில் (05 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில் (03 புள்ளிகள்)

(c) உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (Real GDP) (03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |